# வல்வெட்டித்துறை சிவன்கோவில் அமைக்கப்பட்ட திருக்கல்யாண மண்டபம்

வல்வை வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமிகள் தேவஸ்தானம் 'சிவ சிவ'' எனும் வல்வையூர் அப்பண்ணா அவர்களாளால் 13.10.2011 ல் எழுதி வெளியிடப்பட்ட வரலாற்று ஆவண நூலில் 05ம் பக்கத்தில் 1987ல் எசமான் சபாரெத்தினம் சின்னத்துரை அவர்கள் வன்செயலில் காரணமற் போக இவரது தமையன் சபாரெத்தினம் ராமசாமி (அப்பு அண்ணா) கோவில் எசமானாகி முழு நிர்வாகப் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நடராஜா பெண் வள்ளியம்மாள் (ஆதி கோலடி பதிப்பில் இல்லை) அவர்களால் 2ம் பிரகார வட புற வீதியில் (ஈசான மூலையிலிருந்து மேற்காக) திருக்கல்யாண மண்டபம் 1989ல் கட்டிக் கொடுக்கப்பட்டது. பின்னாளில் அந்தமண்டபம் அவர்களாலேயே மேலும் அடிகள் நீட்டிக் கட்டப்பட்டிருப்பதால் மகோற்சவத்தின் 12ம் திருவிழாவன்று இரவு நடைபெறும் எம்பெருமானின் திருக்கல்யாண உற்சவம் இந்தத்திருமண மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றுவருகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றிய எனது சில குறிப்புக்களையும் படங்களையும் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

பரம்பரை பரம்பரையாகவே சிவ தொண்டாற்றி வரும் சிவலை முருப்பிள்ளை எனும் (1838ல் பிறந்தவர்) என ஊகிக்கப்படுகிறது. எமது மூத்தகுடி (பிதா) மகன் அவர்களின் வாரிசுகளில் ஒருவர்தான் எனது தாயார் திருமதி நடராசா வள்ளியம்மான் (சீட்டுக் கார வள்ளியம்மாள் என அறியப்பட்டவர்)

எனது சிறுபிராயத்திலிருந்தே தான் அறிந்த உலக கதைகளையும் எனக்கு கூறுவதுண்டு. (அதில் ஒன்று – 2ம் உலகப் போரின் போது வாயில் இரு சொண்டுகளும் நுளையிட்டு மாங்காய் பூட்டு (Padlock) போடப்பட்ட காப்பிலிகள் (ஆபிரிக்க நீக்கி ரோக்கனை தான் கண்டதாகவும் அவர்கள் ஆங்கிலேயரின் அடிமைகளாக இங்கு கொண்டு வரப்பட்டு பல்வேறு கடின வேலைகளை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டவர்கள் எனவும் - ஒரு 240 லீற்றர் கொள்கலன் கொண்ட பாரத்துடன் முழுப் பரலை முதுகில் சுமக்க கூடியவர்கள் என்றும் கூறி, தான் அவர்களை

கண்டதாகவும் கூறியுள்ளார் - இதில் எவ்வளவு உண்மைத்தன்மை என்பது என்னாலேயே நம்பமுடியாத ஒன்றாக உள்ளது

இவ்வாறு எமது ஆதிகோவலடி பற்றியும் பிளேட் காலம் பற்றியும் (அதாவது எனது கருத்துப்படி Plague எனும் தொற்றுநோயினை தற்போதுள்ள கொரோனா (Covid 19) இலங்கை மக்களும் கைசாலமும் பாதிக்கப்பட்ட நிலையில் வல்வெட்டித்துறை மாலுமிகளே இந்தியாவிலிருந்து அரிசி முதலிய அத்தியாவசிய பொருட்களை (அவர்கள் குறிப்பிடும் கள்ளக் கடத்தல் ஊடாக கண்டும் காணதது போல் இருந்தார்கள்) இந்தியாவிலிருந்து கொணர்ந்து இலங்கை அரசிற்கு உதவி பரிந்தமை போன்ற கதைகளையெல்லாம் சொல்லி எனது ஆர்வத்தை தூண்டி இக்கட்டுரைபோல பல ஆவணக்கட்டுரைகளை எழுத வைத்தவர் எனது தாயார்.

இவர் எனது சிறு பராயத்திலிருந்தே என்னையும் வெள்ளிக்கிழமை தோறும் அதிகாலைப் பூசைக்கு சிவனை தரிசிக்க கூட்டிச் செல்லது வழக்கம். எமது முக்கியமான விரதமாக நாம் இன்றும் கடைப்பிடித்து வருவது கார்த்திகைச் சோமவாரம் ஆகும்.

எனது அன்னையார் அடிக்கடி தன்னை தனது கனவில் ஒரு பசு மாடு துரந்துவதாகவும் தான் ஏதோ ஒரு  குறையை சிவனுக்கு செய்வதாகவும் கூறிவந்தார்.

நாட்டு நடப்பினால் இவர் எமது இளைய தம்பி ந.யோகரட்ணத்துடன் ஜேர்மனியில் சிலகாலம் வாழ நேர்ந்தது. அப்போதும் இது பற்றியே கூறிவந்தார் (அப்போ அம்மா எப்படி உங்கள் பொழுது போகின்றது என நான் கேட்கும் போதெல்லாம் **'என்னடா தம்பி ஊமையன் கூத்து பார்த்த மாதரித்தான்"** இங்கு நான் வாழ்கிறேன் உன் தம்பி T.V யை போட்டு குளிர் சாதனப் பெட்டியில் (Refrigerator (Frig)) வகைவகையான உணவுகளையும் வைத்துவிட்டு கணவனும் மனைவியுமாக வேலைக்கு போய்விடுவார்கள் நான் சுருட்டைப் பத்திக் கொண்டிருப்பன். எப்ப ஊருக்கு வருவன் என்றிருக்கிறேன். என்பார்.

இக்கால கட்டத்திலும் தன்னை பசு மாடு துரத்துவது பற்றியும் சொல்லி எம்பெருமானுக்கு ஒரு திருக்கல்யாண மண்டபம் கட்ட வேண்டுமடா தம்பி' எனக் கூறிவந்தார்.

அம்மாவின் ஆசையை திருப்பணியை நிறைவேற்ற நானும் திடசங்கற்பம் பூண்டேன் ஆனால் இக்கை வங்கியில் (BOC) சாதாரண ஊழியராகவும் குடும்பப் பொறுப்புடனும் இருந்த நான் , இதற்கென ஒரு சீட்டை (ஊரில் தற்போதும் நடைமுறையில் உள்ளது.) போட்டு நிதியை திரட்ட தொடங்கினேன். இந்நிதிக்கு மேலும் எனது குடும்பத்தினரும் பங்களிப்புசெய்தனர் அவையாவன.

1. எனது தாயார் ஜேர்மனியில் இருந்த காலத்தில் அவருக்கு கிடைத்த முதியோருக்கான அரசாங்கப் பணம்.(Asylum money)
2. ஏற்கனவே எனது மூத்த சகோதரியாரிடம் அம்மா கொடுத்து வைத்த பணம்
3. எனது சீட்டுக்களால்சேர்த்த பணம்
4. எனது தம்பிமரராகிய ந.யோகரட்ணம், மற்றும் ந. அரியரட்ணம் ஆகியோர் செய்த நிதி உதவி.

இவற்றை யெல்லாம் கொண்டு திருக்கல்யாண மண்டபம் கட்ட முற்பட்ட போது அதற்குரிய அனுமதியை எமானிடம் பெற வேண்டியிருந்தது.

எனவே அம்மாவும் நானும் அவரை அணுகி அனுமதி கேட்டோம்.

1987ல் செமான் சபாரெத்தினம் சின்னத்தரை அவர்கள் வன்செயலால் காணமல் போனதன் பின் இவரது தமையனார் சபாரத்தினம் இரமசாமி (அப்பு அண்ா) அவர்கள் கோவில் எசமானாகி முழு நிர்வாகப் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்ட காலம் அது.

அவர் பின்வருமாறு கூறினர். இந்த மண்டபத்தை அமைக்கும் உரித்து 12ம் திருவிழாக்காருக்குரியது. இது ஆதிகோவிலடி மக்களால் நடாத்தப்படுவது (இப்போ பல நீண்டகாலமாக ஒன்றைவிட்டு ஒரு வருடம் ஆதிகோவிலடியாரும் மதவடியாரும் வருடாந்தம் மாறி மாறி செய்து வருகின்றனர் என்பதும் வாசகர்களால் அறியப்பட வேண்டிய தொன்றாகும்) எனவே இதற்குரிய மண்டபத்தை கட்டுவதற்கு எமது கோவிலுக்குரிய சூரைனை 1898 ல் கொண்டு வந்தவர்களால் முக்கியமான சிவலை முருக்குப்பிள்ளையின் பரம்பரைக்கே கொடுப்பது என எனது முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

நீங்களும் அந்த அடியை (பரம்பரையை) சேர்த்தவர்களாக இருப்பதாலும், ஒரு காலத்தில் இத்தொண்டினை செய்ய, வந்த ஆறப்பாவின் மகன் சிங்கப்பூர் துரையரும் (துரைசாமி) அவரது தம்பி (சிங்கப்பூரில் இருந்தவர்) என எவரும் இதை செய்ய முன்வந்த போதும் அவர்களால் செய்ய முடியாமல் போன படியால், “உங்கள் குடும்பம் இப்புண்ணிய காரியத்தை செய்வதற்கு உரித்துடையவர்களே” எனக்கூறி எமக்கு அனுமதி தந்தார்

இதற்கமையவே எனது அம்மாவின் வேண்டுதலை நிறைவேற்றும் பொருட்டு என்னாலும் என் குடும்பத்தவரின் அனுசரணையுடனும் இப்புண்ணிய காரியம் ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது, தற்போது இருக்கும் பிரதம குரு திரு. மனோகராக்குருக்களே சிவன் கோவில் பூசைகளுக்கு பொறுப்பாக இருந்தவர். (இவரும் நானும் சிறிய வயதில் சிவகுரு வித்தியாசாலையில் ஒன்றாக கல்வி பயின்றவர்கள்)

எனவே இவரை அணுகி நாம் சமயாசார முறைப்படி செய்ய வேண்டிய விபரங்களை தெரிந்து கொண்டோம். அதில் எனது ஞாபத்தின்படி அடிப்போடுவதற்கு ( .. ) பல சமய சாரப் பொருட்கள் தேவையெனக் கூறினர் .

அவற்றுள் நினைவிலிருக்கின்ற

a. பலவகை மண்
    1. கோயில் மண்
    2. புற்றுமண்
    3. ஆற்றுமண்
    4. கடற்கரை மண்
b. பலவகைப்பூக்கள்
    1. தாமரைப்பூ
    2. செண்பகப்பூ
    3. ஜம்பொன்
    4. முல்லைப்பூ
    5. மருக்கொழுந்து

அத்தடன்

சங்கு
ஜம்பொன்
நவரத்தினங்கள்

என்பவையாகம்.

எனது பரம்பரை விளங்கவேண்டும் என்பதால் எனது ஒரேயொரு புத்திரன் சாருபனைக் கொண்டு காரியங்களை செய்விக்க எண்ணினேன். அவருக்கு அப்போது 05 வயது , இப்பெரும் காரியத்தை செய்வதற்கு முக்கியமான இரு விற்பன்னர்கள் தேவைப்பட்டனர். அதாவது

1. கட்டட வேலை
2. மரவேலை (ஊசிக்கால் தொடக்கம் கோப்பிசம் வரை) செய்ய

எம்பெருமான் அருளால் இதற்கென மிக பொருத்தமான இருவர்கள் அந்த நேரத்தில் அறிமுகமும் நட்புமாக இருந்தனர்.

1. கட்டடவேலைக்கு வல்வெட்டித்துறையில் பிரசித்தி பெற்ற அமரர் சிவாலிங்கம் பேத்திரியார்
2. மரவேலைக்கு எனது பள்ளி நண்பர் திரு. கனகரட்ணம் பாலசுப்பிரமணியம் (உடுப்பிட்டியை சேர்ந்த பிற்காலத்தில் பிறப்பு, இறப்பு பதிவுகாரராக இருந்தவர்.

இதைத் தவிர எனது ஊரன (ஆதிகோவிலடியிலிருந்து ஒரு பலமான சக்தி எனது அக்காவின் மகன் இராசகுமாரால் அறிமுகப்படுத்தப்பட்ட குழு. இக்குழுவே கடைசிவரை சகல சாரீர உதவிகளையும் செய்தவர்களாவர்.

இது செல்லச்சாமி அண்ணா மற்றும் நல்லதம்பி இவாஜி அவர்களின் வழிகாட்டலில் மிகப் பெரும் உதவி செய்தது. இவர்களையும் எனது மண்ணின் உடன் பிறப்புக்களையும் நான் இன்றும் நினைவு கூருகின்றேன்.

எனது அன்னையான சீட்டுக்கார வள்ளியம்மாள் இக்காரியங்கள் நடைபெறும் போது தனது ஆசையையும் கூறிவைத்தார். அதாவது தனது பேரானாராகிய சிவலை முருகர் என அழைக்கப்பட்ட வல்லிபுரம் முருகுப்பிள்ளைதான், தானியனாக இருந்தபோது தனது குழுவினரின் ( ஆதிகோவில் நிர்வாகத்தை அப்போ 1890களில் நடாத்திவந்தவர்களுடன்) உதவியுடன்,

இந்தியாவிலிருந்து கொண்டுவந்த(1898), சிவன்கோவிலில் தற்பொழுதும் இருக்கும் சூரனின் பாதத்தில், அந்த தர்மத்தினை செய்தவர்களின் பெயர் விபரங்கரளையும் நான் செதுக்குவித்தேன். அதனால் இன்றும் அந்த சூரபத்மனை சிவன் கோவிலுக்கு அர்ப்பணம் செய்த வரலாற்றை அது கூறுகின்றது. இது பெருமைக்கோ புகழுக்கோ அன்றி தாம் செய்த தர்மம் பின்வருவோராலும் செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே என்று எனது தாயார்(01.08.1915 இல் பிறந்து 10.01.2003 இல் இயற்கை எய்திய நடராஜா வள்ளியம்மாள் ஆகிய ) எனக்கு சொல்லி வைத்தார்.

இதை உய்த்துணர்ந்த நானும் இக்குறிப்பிட்ட திருக்கல்யாண மண்டபத்தில் , கல்வெட்டுப் போல ஒரு பதிவை உருவாக்க எண்ணினேன்.

அதன்படி அம் மண்டபத்தில் **சிவலை முருகர் பேத்தி ஆதிகோவிலடி நடராஜா வள்ளியம்மாள் உபயம்** எனப் பதிப்பித்தேன். இத்துடன் மட்டுமல்லாமல் அம்மா பின்வருமாறு கூறினார்.

‘‘ தம்பி, மாப்பிளை பொம்பிளை கல்யாணம் முடித்து ஊர்வலமாக வரும் போது அவர்களுக்கு எமது வீட்டுவாசலில் பூரணகும்பம் வைத்து ,மாலை , பட்டுச்சால்வை என்பன அணிவித்து வருவது எமது தமிழ்ர் பண்பாடல்லவோ? அதுபோல நீயும் உன் காலத்தில் சிவன் பார்வதி திருமணம் முடிந்து வசந்தமண்டபத்திற்கு சோடியாகப் வலம்வரும் போது மண்டபத்திலேயே ஒரு பூரணகும்பம் வைத்து இருவருக்கும் மாலை மரியாதை செய்ய எசமானுடன் கதைத்து உத்தரவு பெற்றுக்கொள்’’ என்றார்.

இது என்னை சிந்திக்க வைத்தது. நான் படித்த இராமாயணத்தில் இராமர் முடிசூடப் போகிறார் என்று மக்கள் அறிந்ததும், ஊரே தமது சொந்த வீட்டில் திருமணம் நடப்பதை போன்று மிக உணர்ச்சிபூர்வமாக வீட்டுக்கு வீடு தோரணம் கட்டி, பூரண கும்பம் வைத்து அவரை வரவேற்க தயாரானார்கள் என்பது எனது ஞாபகத்திற்கு வந்தது.

இதற்கமைய அப்போதைய எசமான் சின்னத்துரை அவர்களை அணுகி எனது விருப்பத்தை கூறினேன். அவரும் சிரித்த முகத்துடன் நானே இதுபற்றி கூறவிருந்தேன் ஆனால் நீங்களாகவே கேட்டுவிட்டீர்கள் என்றார். ஆகவே தாராளமாக நீங்கள் உங்கள் வழிப்பூட்டனார் செய்த சூரபத்மன் வைத்திருந்த வாகன அறைக்கு முன்னால் கும்பம் வைத்து இப்புண்ணிய காரியத்தை செய்யுங்கோ எனக்கூறி ஆசியும் வழங்கினார்.

இதற்கமைய இன்று வரை அதாவது எனது தாயார் (அமரர்) இருந்த காலம் தொட்டு நாம் அதாவது எமது வாரிசுகள் சிவன் பார்வதி தம்பதிகள் திருமணம் முடிந்து தம்பதிகளாக வசந்த மண்டபத்திற்கு வரும் போது அவர்களுக்கு பூரணகும்பம் வைத்து அம்மனுக்கு பட்டுப்புடவையும் சிவனுக்கு பட்டு வேட்டியும் அத்துடன் இருவருக்கும் மாலைகளையும் போட்டு வரவேற்று வருகின்றோம்.